பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 07 2024 **THURSDAY** 6 30 **PM**

தலைப்புச் செய்திகள்

1. கனிம வளங்கள்மீது வரி விதிக்கும் உரிமை மாநில அரசுகளுக்குத்தான் உள்ளது என்று உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்துள்ளது.

2. மத்திய பட்ஜெட்டில் சிறு-குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற முருகன் கோவில்களை இணைக்கும் வகையில் விரைவில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் வில்வித்தை போட்டியின் மகளிர் குழு பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

கனிம வளங்கள் மீது வரி விதிக்கும் உரிமை மாநில அரசுகளுக்குத்தான் உள்ளது என்று உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்துள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான ஒன்பது நீதிபதிகளை கொண்ட அரசியல் சாசன அமர்வு, எட்டுக்கு ஒன்று என்ற அடிப்படையில் இந்த தீர்ப்பினை வழங்கியது. இருப்பினும், இந்த அமர்வில் இடம்பெற்ற நீதிபதி திருமதி **Nagarathna**, மாறுபட்ட தீர்ப்பினை வழங்கினார். கனிமங்களுக்கான வரி விதிக்கும் உரிமையை மாநிலங்களுக்கு வழங்கினால் தேசிய அளவில் ஒரே மாதிரியான அணுகுமுறை பாதிக்கப்படும் என்றும் அவர் அந்த தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

**>>>><<<<**

தமிழகத்தில் சாலை பராமரிப்புப்பணிகளை மேற்கொள்வதற்காக கடந்த மூன்றாண்டுகளில் ஆயிரத்து 214 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது. இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி, நாடு முழுவதும் 37 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் சாலைப்பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார். இப்பணிகள் அடுத்த மூன்றாண்டுகளுக்குள் நிறைவடையும் என்றும் திரு நிதின்கட்கரி தெரிவித்தார்.

**>>>><<<<**

உயர்நீதிமன்ற நீதிபதிகளாக கடந்த ஆறு ஆண்டுகளில் ஷெட்யூல்டு மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவுகளை சேர்ந்த 111 பேர் நியமிக்கப்பட்டுள்ளதாக சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மெஹ்வால் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், உச்சநீதிமன்றத்தின் கிளைகளை அமைப்பது, நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்துவது போன்ற திட்டங்கள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றார்.

>>>><<<<

மத்திய பட்ஜெட்டில் சிறு-குறு தொழில் துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் இடம்பெற்றுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், சிறு-குறு தொழில் துறையின் வளர்ச்சிகாக மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் எரிசக்தி பாதுகாப்பு இருக்க வேண்டும் என்ற நோக்கில், பல்வேறு அம்சங்கள் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாகவும் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

>>>><<<<

நாடு முழுவதும் 25 ஆயிரம் இளையோருக்கு திறன் கடனுதவித் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், இந்த திட்டத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தொழில்துறையின் எதிர்கால தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த பயிற்சி இருக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன், மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீலை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

காவிரி நதிநீர் பங்கீடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்த சந்திப்பின்போது அவர் ஆலோசனை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீராக பராமரிக்கப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

இதன் காரணமாகத்தான் தொழில், கல்வி, கட்டமைப்பு போன்ற துறைகளில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாநிலத்தில் 39 புதிய மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் காவல்துறையின் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களும் அந்த செய்திக்குறிப்பில் பட்டியலிடப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார். இன்று ஆவடியில் மின்கட்டண உயர்வை தமிழக அரசு திரும்பப்பெற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேமுதிக சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார். திமுக ஆட்சிக்கு வரும்போதெல்லாம் கொலை மற்றும் கொள்ளை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அவர் குறை கூறினார். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்றும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தினார்.

>>>><<<<

தமிழக அரசின் குற்ற வழக்குகள் துறை இயக்குனராக திமுக-வை சேர்ந்த திரு ஹசன் முகமது ஜின்னா நியமிக்கப்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், முதலமைச்சருக்கு நெருக்கமானவர் என்பதற்காக அரசு பதவி வழங்கியருப்பது அதிகார துஷ்பிரயோகமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

உலக முருக பக்தர்கள் மாநாடு அடுத்த மாதம் 24 மற்றும் 25-ஆம் தேதிகளில் பழனியில் நடைபெறவுள்ளதையொட்டி, விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு கூறியுள்ளார். இன்று பழனியில் இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநாட்டிற்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் இலவசமாக பிரசாதம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். ஐந்தாயிரம் பேர் அமரக்கூடிய வகையில் மாநாட்டு பந்தல் மற்றும் உணவு பந்தல்கள் அமைக்கும்

பணி நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார். இந்த மாநாட்டையொட்டி, உள்ளூர் விடுமுறை அறிவிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் திரு சேகர்பாபு தெரிவித்தார்.

**>>>><<<<**

தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற முருகன் கோவில்களை இணைக்கும் வகையில் விரைவில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார். இன்று தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பேருந்து நிலையத்தில் புதிய பேருந்துகளின் சேவையை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

**>>>><<<<**

நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார். எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

**>>>><<<<**

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டத்தில் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு கே வி அஜித் முன்னிலையில் நடைபெற்றது.

**>>>><<<<**

சேலம் மாநகராட்சியின் ஆணையாளராக திரு ரஞ்ஜித் சிங்கும், நெல்லை மாநகராட்சியின் ஆணையாளராக திரு சுக பத்ராவும் இன்று பொறுப்பேற்றுக்கொண்டனர்.

**>>>><<<<**

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் வில்வித்தை போட்டியின், மகளிர் குழு பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஒலிம்பிக் போட்டிக்கான தொடக்க விழா நாளை நடைபெறவுள்ள நிலையில், வில்வித்தை தரவரிசை சுற்று போட்டிகள் இன்று நடைபெற்றன.

இதில் தீபிகா குமாரி, அங்கிதா பகத், **Bhajan Kaur** ஆகியோரை கொண்ட அணி ஆயிரத்து தொள்ளாயிரத்து 83 புள்ளிகளை பெற்று நான்காவது இடத்தை பிடித்தது.

இதன்மூலம், இப்பிரிவில் இந்தியா நேரடியாக காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அங்கிதா பகத் 11-ஆவது இடத்தையும், பஜன் கவுர் 22-ஆவது இடத்தையும், தீபிகா குமாரி 23-ஆவது இடத்தையும் பிடித்தனர்.

**>>>><<<<**

**Zug** ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>END<<<<**